# புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை
**முன்னிலை : முனைவர் நா.அருள்முருகன்**

ந.க.எண் 6396 – ஆ4 – 2013, நாள் 12 .02.2014

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – புதுக்கோட்டை மாவட்டம் - அரசு உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் காலியாக உள்ள முதுகலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் காலிப்பணியிடங்களில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் தற்காலிக ஆசிரியர்கள் நியமனம் செய்தது – தற்காலிக ஆசிரியர்களுக்கு தொகுப்பூதியம் நிதிஒதுக்கீடு செய்து ஆணையிடுதல் - சார்பு.

பார்வை :

01. அரசாணை (டி1) எண் 289, நாள் 07.10.2013.

02. நிதி ((கல்வி 11) துறை அரசு துணை செயலாளரின் அலுவல் முறை சாரா குறிப்பு எண் 61456-2014,

    நாள்.28.01.2014.

03. சென்னை. பள்ளிக் கல்வி இயக்குநர் நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 72276-பி1-இ2-20013, நாள் 28.01.2014.

***

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி அரசு மற்றும் நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் காலியகாவுள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்து நிரப்பப்படும் வரை மாணவர்கள் நலன் கருதி தற்காலிக தொகுப்பூதிய அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமனம் செய்து கொள்ள அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் காலியாகவுள்ள 173 பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தில் தற்காலிகமாக பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.4000- (ரூபாய் நான்கு ஆயிரம் மட்டும்) வீதம் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பிக் கொள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு பார்வை 2ல் காணும் அரசாணைப்படி அனுமதி ஆணை வழங்கப்பட்டது.

பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகளின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் தற்காலிக இணைப்பில் கண்ட பள்ளிகளுக்கெதிரே குறிப்பிடப்பட்ட பாடத்திற்கு நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு 7 மாதங்களுக்குண்டான தொகுப்பூதியம் (மாதம் ரூ.4000- வீதம்) இணைப்பில் கண்ட தலைமை ஆசிரியர் பகிர்ந்தளித்து நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்படுகிறது.

(த.பி.பா)

மேற்குறிப்பிட்ட செலவினங்களுக்கு கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்குமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கணக்குத் தலைவர் :-**

2202 – பொதுக் கல்வி – 02 - இடைநிலைக் கல்வி – 109 – அனைவருக்கும் இடைநிலைக் கல்வி – 1 திட்டத்தில் சேராதது – ஏஏ அரசு இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் - 33 தொழில் முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் - 04, ஒப்பந்த ஊதியம்
(த.தெ.கு. 2202 – 02 – 109 ஏஏ – 3347)

எனவே தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு உடனடியாக சம்பளம் பெற்று வழங்குமாறும் மற்றும் இணைப்பில் கண்டுள்ளவாறு பாடவாரியாக அளிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு குறைவாக நியமனம் செய்யப்பட்டிருப்பின் அல்லது நியமனம் செய்யப்படவில்லை எனில் கூடுதலாக வழங்கப்பட்ட தொகையினை சரண் செய்திட சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**இது மிக மிக அவசரம்**

முதன்மைக் கல்வி அலுவலர்,
புதுக்கோட்டை

07/02/2014

**இணைப்பு : நிதி ஒதுக்கீட செய்த பள்ளிகளின் பட்டியல்**

பெறுநர் :

01. சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.
02. மாவட்டக் கருவூல அலுவலர், புதுக்கோட்டை
03. சார்நிலைக் கருவூல அலுவலர், புதுக்கோட்டை, திருமயம், கந்தர்வகோட்டை, கீரனூர், ஆலங்குடி, அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, இலுப்பூர்.
04. ஆ5 பிரிவிற்கு.
05. சென்னை, பள்ளிக் கல்வி ~~இணை~~ இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
06. மாவட்டக் கல்வி அலுவலர்கள், புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி. தகவலுக்காகவும், தக்க தொடர்நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது. தங்கள் கல்வி மாவட்டத்தில் தாங்கள் பிரித்துக் கொடுத்துள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிட பள்ளிகளை தக்க நடவடிக்கை மேற்கொண்டு ஊதியம் பெற்று வழங்கிய விவரங்களை பெற்று தொகுத்து வழங்கிட தெரிவிக்கப்படுகிறது.